2015 செப்டம்பர் 14]
250—

உடற்பயிற்சிக் கூடம்

***32355—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் என் பணிவான வணக்கங்களைப் பணிந்து வணங்கி சமர்ப்பித்துக்கொள்கிறேன். ஆர்.கே. நகர் வெற்றி பொது மக்கள் வழங்கியது; தங்கம் அமர்ந்த இடத்தில் தகரங்களுக்கு ஏது இடம்? வீரர்கள் நிறைந்த போர்க் களத்தில் கோழைகளுக்கு ஏது இடம்? அறிவாளிகள் ஆக்கிரமித்த இடத்தில் அரைகுறைகளுக்கு ஏது இடம்? ஆர்.கே.நகர் அம்மாவின் நகர். மக்களின் வெற்றி அம்மா அவர்களின் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களை அண்ணாந்து பார்க்கிறார்கள் அனைவரும். எதிரிகள் முன்பு அஞ்சாமை, எல்லோருக்கும் முன்பு ஆளுமை, தொண்டர்களின் முன்பு பொறுமை, மக்களின் முன்பு தாய்மை, வாக்கினில் நேர்மை, வாழ்வினில் தூய்மை, செயலில் திறமை, சிந்திப்பதில் புதுமை, கறைபடியா கரங்கள், களைக்காத கால்கள், கருணையற்ற கண்டிப்பு, கருணையுள்ள கண்காணிப்பு இவை அனைத்தின் மறுவடிவமே மாண்புமிகு அம்மா அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் இரண்டு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து நூற்று அறுபது கோடி ரூபாய் வெளிநாட்டு முதலீட்டை ஒரே நாளில் தமிழகத்திற்குக் கொண்டுவந்த மனித புனிதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான். வளர்ச்சியடைந்த தமிழ்நாடு; வலிமை அடைந்த தமிழ்நாடு; சக்திமிக்க தமிழ்நாடு; சாதனை படைத்த தமிழ்நாடு; சரித்திரத்தின் பக்கங்களில் அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு பொற்காலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்பாய்ப் புரட்சிக்கு வித்திட்ட வேலூர் மாவட்டத்தில் ஆற்காடு நகரத்தில் இன்னும் இரயில்வே பாதுகாப்புப் படை, தமிழகக் காவல் படை, இந்திய இராணுவம், ஊர்க்காவல் படை வீரர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் தேசிய அளவில் சாதனை புரிந்து வருகிறார்கள். இவர்களை மேலும் வலுப்படுத்தவும், புதிய வருங்காலச் சந்ததியினர்களை வலிமை மிக்கவர்களாக உருவாக்கவும், விளையாட்டுத் துறையின் சார்பாக ஆற்காடு நகரில் உடற்பயிற்சிக் கூடத்தை அமைத்திட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, இடம் அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 17 மாவட்டங்களில் ரூபாய் நான்கு கோடியே ஐந்து இலட்சம் அளவில் அரசு மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சென்னையில் தலைமைச்செயலகத்தில் ரூ.50 இலட்சம் செலவில் ஆண்களுக்கு என்று தனியாகவும், பெண்களுக்கு என்று தனியாகவும் உடற்பயிற்சிக் கூடத்தை அமைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்தில் ஜோலார்பேட்டையில் நவீன உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைப்பதற்கு உத்தரவிட்டு அங்கே சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வேலூர் மாவட்டம், சத்துவாச்சேரியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, வருடந்தோறும் ரூபாய் 7 இலட்சத்து 89 ஆயிரம் செலவில் சிறந்த பயிற்சியாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மாவட்டத் தலைநகரங்களில் அமைந்த பின்பு, பெரிய நகரங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

251—

பழங்குடியினர் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***36235 திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சித்தேரி மலையிலுள்ள கலசப்பாடி பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, சித்தேரி